பக்கங்கள் - 08
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka
மின்னிதழ்
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 10 திங்கட்கிழமை (24.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 156

## சஜித்துக்கும் மனைவிக்கும் கொரோனா



### பல எம்.பிக்கள் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அவரது மனைவி ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் எனது மனைவிக்கு தொற்று அறிகுறிகள் ஏற்பட்டதை அடுத்து மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார்.

02




(கொழும்பு)

கடந்த 48 மணித்தியாலங்களில் கொரோனாத் தொற்றினால் 89 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

வீட்டில் உயிரிழப்பவர்களில் பலருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவர்களுக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதியாகின்றமையால் குறித்த எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,178 ஆக உயர்ந்துள்ளது. (ஒ)

### பளை தம்பகாமம் பகுதியில்
## குளத்திலிருந்து பெண் சடலமாக மீட்பு

(முறிகண்டி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பளை தம்பகாமம் இன்னாசி குளப்பகுதியில் பெண் ஒருவரின் சடலம் நேற்றுக்

02

### அல்வாயில் இடம்பெற்ற
## படுகொலையுடன் தொடர்புடைய மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

அல்வாய் பகுதியில் குடும்பத் தகராறு

02

### சுகாதாரத்துறை உத்தரவு வழங்கினால்
# 28 நாட்களுக்கு நாட்டை முடக்குவதற்கு அரசு தயார்

### இராஜாங்க அமைச்சர் அமுனுகம அறிவிப்பு



(கண்டி)

கோவிட் - 19 தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப்படுத்த நியமிக்கப்பட்ட சுகாதாரத்துறை உத்தரவு வழங்கினால் 14 நாட்களுக்கு பதிலாக 28 நாட்களுக்கு நாட்டை முடக்குவதற்கு அரசு தயாராகவுள்ளது என்று போக்குவரத்துத் துறை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மக்களின் உயிருக்கு ஆபத்து விளைவிப்பதன் மூலம் நாட்டை திறந்த நிலையில் வைத்திருப்பதில் அரசுக்கு அக்கறை இல்லை என்று

02

### கொரோனாவால்
## 5 கர்ப்பவதிகள் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் கோவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

சனிக் கிழமை கோவிட் தொற்றுக்

02

### நாட்டில் நேற்றும்
## 2,945 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

இலங்கையில் நேற்று மொத்தம் 2,945 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர

02

### யாழில் தனியார் தொலைக்காட்சி
## ஊழியர்கள் 15 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து செயற்படும் தனியார் தொலைக்காட்சி ஒன்றின் ஊழியர்கள் 15 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தொலைக்காட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

02

## நாளை பயணத்தடை தளர்த்தப்படும்போது அருகிலுள்ள கடைகளுக்கே செல்லலாம்

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவிப்பு



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகள், நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு தற்காலிகமாக தளர்த்தப்படும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

02

### யாழ்.போதனாவில்
## வைத்தியருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தி

02

## 29, 30ஆம் திகதிகளிலும் நாட்டில் பயணத் தடை?

(கொழும்பு)

மே 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்த முடிவு எதிர்வரும் வியாழக் கிழமை எட்டப்படும்

02

### கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில்
## 9 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சியின் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸார் 9 பேருக்கு கொரோனாத் தொற்று

02

## குளத்திலிருந்து...

காலை மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட பெண் தம்பகாமம் பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய பொன்னையா வனஜா என்பவர் என முதற்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

குறித்த பெண் நேற்றுமுன்தினம் காணாமல்போன நிலையில் உறவினர்கள் தேடி அலைந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை குறித்த பெண்ணின் சகோதரரால் குறித்த பெண்ணின் சடலம் குளத்தில் இனங்காணப்பட்டுள்ளதாக பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

குறித்த இடத்திற்கு வருகை தந்த பளை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மக்களின் உதவியுடன் சடலத்தினை மீட்டதுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஞா-100,316)

## ஊழியர்கள்...

அண்மையில் குறித்த தொலைக்காட்சியின் நிகழ்ச்சிப் பிரிவைச் சேர்ந்த பெண் மற்றும் ஆண் ஊழியர்கள் இருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

அதன் தொடராக குறித்த தொலைக்காட்சி ஊழியர்களுக்கு 3 கட்டங்களாக பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நேற்று வரை வெளியான முடிவுகளின் அடிப்படையில் குறித்த தொலைக்காட்சியின் வாகனச் சாரதி உட்பட ஊழியர்கள் 15 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஞா)

## சஜித்துக்கும்...

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதியானது என நேற்று வெளியிட்ட டுவிட்டர் பதிவில் சஜித் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி நானும் பிசிஆர் பரிசோதனை செய்துகொண்டேன். பிசிஆர் முடிவில் எனக்கும் நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

எனது மனைவிக்கு தொற்று அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன. எனக்கு இதுவரை எந்த அறிகுறிகளும் ஏற்படவில்லை. நாங்கள் இருவரும் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறோம்.

ஒரு தேசத்தின் மக்களாக தொற்று நோயை எதிர்த்து நாங்கள் ஒன்றிணைந்து போராட வேண்டும். அனைவரும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நெருக்கடியை நாம் வெல்ல முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் கடந்த வாரம் நெருங்கிய தொடர்பை பேணிய அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிசிஆர் சோதனைகளை மேற்கொள்ளுமாறு பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ அறிவுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் நெருங்கிய தொடர்புகளை பேணியவர்களை அடையாளம் காணும் பணியில் தற்போது பாராளுமன்ற அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

சஜித் பிரேமதாஸவிற்கு தொற்று உறுதியானதும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தன்னை சுயதனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

கொரோனா 3ஆவது அலையில் தொற்றிற்குள்ளாகும் 3ஆவது பாராளுமன்ற உறுப்பினர் சஜித் ஆவார். முன்னதாக, மருதபாண்டி ராமேஷ்வரன், முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் தொற்றிற்குள்ளாகியிருந்தனர். (ஞா)

## படுகொலையுடன்...

காரணமாக இடம்பெற்ற மோதலில் குடும்பத் தலைவர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் கொலையுடன் தொடர்புடையவர்கள் எனத் தேடப்பட்டு வந்த இரண்டு பெண்கள் உட்பட மூவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் தலைமறைவாகி வசாவிளான் பாடசாலைக்கு அண்மையில் வசித்து வந்த நிலையில் கைது செய்யப்பட்டனர் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

அல்வாய் பகுதியில் கடந்த ஏப்ரல் 20ஆம் திகதி உறவினர்களான இரு பகுதியினருக்கு இடையே இடம்பெற்ற மோதலில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான முருகராசா கௌசிகன் (வயது- 31) என்பவர் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலடியில் உறவினர்களுக்கு இடையில் பணக் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை வாய்த்தர்க்கமாக ஆரம்பித்து வாள்வெட்டில் முடிந்தது.

சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 6 பேர்படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

சிகிச்சை பெற்றவர்களில் இருவர் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியதாகவும் மேலும் இருவர் கொல்லப்பட்டவருடன் மோதலில் ஈடுபட்டவர்கள் எனவும் பருத்தித்துறை பொலிஸாரால் மறுநாள் ஏப்ரல் 21ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

மேலும் மூவர் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். பொலிஸ் புலனாய்வுப் பிரிவு வழங்கிய தகவலின் அடிப்படையில் தலைமறைவாகியிருந்த மூவரும் வசாவிளான் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

20 மற்றும் 50 வயதுடைய பெண்கள் இருவரும் 56 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் மூவரும் விசாரணைகளின் பின்னர் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஞா-33,60)

## நாளை பயணத்...

அதன்போது, பொதுமக்கள் அருகிலுள்ள கடைகளுக்கு மட்டுமே சென்று, பொருட்களை கொள்வனவு செய்துவிட்டு, உடனடியாக வீட்டுக்குத் திரும்ப வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதன்போது ஒருவர் மாத்திரமே வீட்டிலிருந்து வெளியே செல்ல வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும் காலப் பகுதியினுள் உணவுப்பொருள் விற்பனை நிலையம், மருந்தகம், எரிபொருள் நிரப்பு நிலையம் போன்ற அத்தியாவசிய விற்பனை நிலையங்கள் மாத்திரமே திறக்க அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஞா)

# ஊரெழுவில் விபத்து; விமானப் படை வீரர் பலி

(யாழ்ப்பாணம்)

ஊரெழுப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் விமானப் படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கண்டி வெலிமட பகுதியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான ஏ.எம்.என்.குணசேகர (வயது-33) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த விமானப் படை வீரர் விடுமுறையில் வீடு சென்று கடந்த 19ஆம் திகதி வாகனத்தில் மீண்டும் பலாலி திரும்பிக் கொண்டிருந்தபோது ஊரெழு அம்மன் கோவிலடிப் பகுதியில் நாயொன்று குறுக்கே சென்றதால் வாகனச் சாரதி திடீரென பிரேக் பிடித்துள்ளார்.

இதன்போது குறித்த விமானப் படை வீரர் வாகனத்தின் முன்கதவால் கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

## தனிமைப்படுத்தல் விதிகளை மீறுவோர்களை ட்ரோன் கமராக்கள் மூலமும் கண்காணிப்பு

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 369 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதுபற்றி கண்காணிப்பதற்கு சுமார் 22 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக ட்ரோன் கமராக்கள் மூலம் கொழும்பிலுள்ள அடுக்குமாடி குடியிருப்புக்கள் மற்றும் கிராமப் பகுதிகளை கண்காணிக்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் வீட்டு வளாகங்களில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறும் சம்பவங்கள் பதிவாகுவதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றார். (ஞா)

## 28 நாட்களுக்கு...

அவர் குறிப்பிட்டார்.

நேற்றுக் காலை கண்டியில் தடுப்பூசி வழங்கும் திட்டத்தில் பங்கேற்றபோது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இவ்வாறு பதிலளித்தார்.

இதற்கிடையில், சுகாதார ஊழியர்களுக்கான போதிய போக்குவரத்து வசதிகள் தொடர்பாக இந்த நாட்களில் சமூக ஊடகங்களில் பரவி வரும் தகவல்களில் உண்மை இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஞா)

## 29, 30ஆம்...

என இராணுவத் தளபதி அறிவித்துள்ளார்.

தற்போது உள்ள கொரோனா தொற்று நிலைமையை கருத்திற்கொண்டு குறித்த முடிவு எட்டப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட காலகட்டத்தில் அத்தியாவசிய சேவைகள் மற்றும் மருந்தகங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஞா)

## 2,945 பேருக்கு...

சில்வா அறிவித்துள்ளார்.

இவற்றுடன் நாட்டில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 164,187ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் மேலும் 1,612 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இவர்களுடன் நாட்டில் இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 128,607 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## 5 கர்ப்பவதிகள்...

குள்ளான மற்றுமொரு கர்ப்பவதித் தாயும் உயிரிழந்துள்ளதோடு, மேலும் 46 கோவிட் மரணங்களும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டது.

குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய கர்ப்பவதியொருவரே இவ்வாறு கோவிட் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

ஹோமாகம வைத்தியசாலையிலிருந்து முல்லேரியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இவர் உயிரிழந்துள்ளார்.

அதற்கமைய இலங்கையில் இதுவரையில் கோவிட் தொற்றால் 5 கர்ப்பவதிகள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## 9 பொலிஸா...

உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது குறித்த அறிவிப்பு சுகாதாரத் தரப்பினரால் சம்பந்தப்பட்ட பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 21 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு தொற்றாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்புபட்டவர்களை தனிமைப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஞா)

## வைத்தியருக்கு...

யர் ஒருவருக்கும் மருத்துவ ஆய்வுகூட பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கும் நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

விடுதி இலக்கம் 02 இல் பணியாற்றிய மருத்துவர் ஒருவருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனை அடுத்து அவர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றியவர்களை சுகாதார நடைமுறைகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஞா)

அறம் கணக்கற்ற பாவங்களை மூடிவிடும்!
– புனித பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தினை செய் மனமே!

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாடு முடங்கிக் கிடக்கிறது.

விஞ்ஞானத் தொழில்நுட்பம் அபார வளர்ச்சி கண்டுள்ள நிலையில் இப்படியொரு அவல நிலை உலகம் முழுமைக்கும் ஏற்பட்டுள்ளது எனும்போது,

ஊழிக்காலப் பிரளயம் பற்றிச் சிந்திக்காமல் இருக்க முடியாது.

பொதுவில் இதிகாசங்களும் காப்பியங்களும் பேசுகின்ற அடிப்படைத் தத்துவங்களை ஆராயும்போது, ஒவ்வொரு யுகம் தோறும் இந்தப் பிரபஞ்சம் ஒடுங்கியுள்ள தென்பதை உணரமுடியும்.

வால்மீகி வழிநின்று கம்பர் தந்தருளிய இராமாயணம், வில்லிபுத்தூராரின் மகாபாரதம், இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம் இவை அனைத்தும் அறம்பிழைத்ததனால் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக நடந்த வற்றை படம் பிடித்துக் காட்டுவன.

அந்தவகையில், கலிகாலமாகிய இந்த யுகத்தில், யுத்தங்களும் நோய்களும் மனித குலத்துக்கு அவலம் தருவதாக அமைந்துள்ளன.

ஆக, கொரோனா எனும் கொடிய நோயி னின்றும் மனிதகுலம் மீண்டெழ வேண்டுமாயின் அதற்கான கடைசி மருந்து கடவுளிடம் கையேந்துவதுதான்.

ஆம், உலகம் முழுவதும் இறைவழிபாடும் பிரார்த்தனையும் யாகங்களும் யோகங்களும் நடந்தாகும்போது, நிச்சயம் ஊழிக் காலப் பிரளயத்தினின்றும் மனுக்குலம் மீண்டெழ முடியும்.

அதற்கு முன்னதாக இப்பூமியின்கண் தர்மத்தை நிலைநாட்டும் பொறுப்பை இறைவன் இயற்கையினூடாக அமுல்படுத்த முற்பட்டுள்ளான் என்பது உணர்தற்குரியது.

ஆம், அறம் பற்றி மிகத்தெளிவாக எடுத்தியம்பியவர் திருவள்ளுவர் பெருமான்.

அறம் பற்றிய அவரின் கருத்து இவ் வையகத்தில் நிலைபேறடையும்போது, கருணைக் கடவுளாகிய இறைவன் உலகப் பிரபஞ்சத்தைக் காத்தருள்வான் என்பதுதான் மெய்மையானது.

அந்தவகையில்,

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை

என்பார் வள்ளுவர்.

எம்மிடம் இருப்பதை மற்றவர்களுக்கும் பிரித்துக் கொடுத்து பல்லுயிர்களையும் பாதுகாப்பதுதான் இந்த உலகின் முதல்தர அறமாகும்.

எனவே அறம் பற்றி உரைத்தவர்கள் கூறிய அறங்களில் எல்லாம் தலையாய அறமான; பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தை நாம் அனைவரும் நிச்சயம் கடைப்பிடிக்க வேண்டும்.

அதற்கான ஒரு சந்தர்ப்பம்; நாடு முடங்கியிருக்கும் இவ்வேளையில், பக்கத்தில் இருப்பவர்கள் உண்ணுகிறார்களா? என்று ஒரு தடவை பார்த்து, அவர்களும் உண்பதற்கு வழி செய்து நாமும் பசி ஆறுவோமாயின் அதுவே இந்த உலகத்தைக் காக்கவல்ல அருமருந்தாகும்.

# நாட்டை முடக்காவிடின் அதிக மரணங்கள் பதிவாகும்

(கொழும்பு)

நாட்டில் கொவிட் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக விசேட வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்தியர் லக்குமார் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் அமல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாட்டை சுகாதார தரப்பின் ஆலோசனைகளை மீறி, 14 நாட்களுக்கு முன்னரே தளர்த்தும் பட்சத்தில், கொரோனா தொற்றினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை எதிர்வரும் நாட்களில் நூற்றுக்கணக்காக அதிகரிக்கும் என அவர் எச்சரித்துள்ளார்.

நாட்டில் இதற்கு முன்னர் அமுல்படுத்தப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடானது, முன்னோடியாக செயற்படுத்தி பார்த்த ஒன்று எனவும், அந்த பயணக் கட்டுப்பாட்டில் எந்தவித விஞ்ஞான ரீதியான நடைமுறைகளும் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4,6)

# தாழமுக்கம் இன்று

## புயலாக மாறும் சந்தர்ப்பம்

(கொழும்பு)

வங்காள விரிகுடா கடல் பிரதேசத்தில் நிலைகொண்டிருக்கும் தாழமுக்கம் இன்று திங்கட்கிழமை புயலாக மாற்றமடையக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு, இடியுடன் கூடிய மழையும் பெய்யக்கூடும் என்பதுடன், 70 தொடக்கம் 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடுமென்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வங்காள விரிகுடாவின் கிழக்கு மத்திய பகுதியிலும் அதனையடுத்து நாட்டைச் சூழவுள்ள கடல் பிரதேசத்திலும் மறு அறிவித்தல் வரை மீன்பிடி மற்றும் கடல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (4,6)

# எரிபொருள் விலையை உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

உலக சந்தையில் அதிகரித்து வரும் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு ஏற்ப இலங்கையிலும் எரிபொருட்களின் விலையை மீள்திருத்தம் செய்ய மத்திய வங்கி எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் மத்திய வங்கியின் ஆளுனர் டபிள்யூ. டி.லட்சுமன் உள்ளிட்ட மத்திய வங்கியின் பிரதிநிதிகள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டனர் .

குறித்த கலந்துரையாடலில் அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் கலந்து கொண்டார்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர், மத்திய வங்கியுடன் இவ் வாறான வெளிப்படையானதும் ஆரோக்கியமானதுமான கலந் துரையாடல்கள் நாட்டின் பொருளாதார ஒருங்கிணைப்புக்கு வழி வகுக்கும்.

எரிபொருள் விலையை தீர்மானிப்பதில் மத்திய வங்கியின் பங்கு முக்கியமானது.

எரி பொருளுக்கான விலை நிர்ணயம் தொடர்பாக அமைச்சரவையில் கலந்துரையாடி முடிவை மத்திய வங்கிக்கு தெரிக்க இருப்பதாக தெரிவித்தார். (4-6)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** மத்தோனி, விக்னேஸ்வரா, கரவெட்டி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** சீனோக வர்த்தகம்- ஓமந்தை ஸ்ரீலங்கா தொழில்நுட்பக் கல்லூரி, ஓமந்தை யூனியன் அலையன்ஸ் லிமிடெட், ஓமந்தை வீட்டுத் திட்டம் ஆகிய பிரதே சங்களிலும் மின் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## திருவிளையாடல்



இயக்க மண்டலத்திலுள்ள எல்லாவற்றையும் சூழ்ந்தமுத்திக் கொண்டிருக்கும் தூய இறைவெளிதான் இருப்பு மண்டலம். தூய வெளியெனும் பிரம்ம நிலை தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் பேராற்றலால், எந்த ஒன்றையும், மற்ற ஒன்றிலிருந்து பிரிந்து போகாமல், சூழ்ந்தமுத்திக் கொண்டிருக்கின்றது. ஆயினும், ஒவ்வொரு வேதான் நுண்ணணுவும் தனது தற்சுழற்சி விரைவாலும், யோகான் எனும் நுண்ணணுவின் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் எனும் காந்த தன்மாற்ற அலைகளாலும், நுண் விண்களிடையே குறிப்பிட்ட அளவில் தொலைவு அமைந்திருக்கின்றது. அது காக்கவும் படுகின்றது.

எனவே, நுண்ணணுவானாலும் சரி, அண்டங்கள் ஆயினும் சரி, அவற்றில் எழுந்து இயங்கும் அலையின் அழுத்தத்திற்கு மேலாக எதுவும் விலகிப் போகாமல் காப்பது சூழ்ந்தழுத்தம் அனைத்தியக்க அருட் பேராற்றலே. அதே போன்று எந்த நுண்ணணுவோ, அண்டங்களோ - அவற்றிலிருந்து வெளியாகும் அலைகளின் தள்ளும் ஆற்றலுக்கு மேல் விலகவும் முடியாது. இந்த நியதி தான் வான்காந்த ஆற்றலின் விளைவு.

மேலும், நுண்ணணுக்களாகிய வேதான்கள் இடையிலும், கோள்களின் இடையிலும், கோள்களின் உட்புறம் உள்ள இறைவெளியிலும் கணக்கிட முடியாத அளவில் யோகான் நுண்ணணுக்கள் தோன்றிக் கொண்டேயும், அவை தன்மாற்றங்களை அடைந்து கொண்டேயும் இருக்கும் விந்தைகளே வான்காந்தம் எனும் மறைபொருள் பேரியக்க மண்டலத்தில் ஆற்றும் திருவிளையாடல்கள். இயற்கையின் இயல்பாக நடைபெறும் தெய்வீக நிகழ்ச்சிகளைத் திருவிளையாடல் என்று வழங்குகிறோம்.

# முறையான சிகிச்சை இல்லையெனில் அறிவிக்குக



(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளில் உரிய சேவைகள் கிடைக்கா விட்டால் அது குறித்து சுகாதார அமைச்சுக்கு அறிவிக்குமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் நோயாளர்களிடம் கேட் டுக்கொண்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றி னால் பாதிக்கப்பட்டு வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டு ள்ள சில நோயாளர்களுக்கு சில வைத்தியசாலைகளில் முறை யான சிகிச்சைகள் வழங்கப்படு வதில்லை என்று குற்றச்சாட் டுக்கள் முன்வைக்கப்பட்டுள் ளன.

கொரோனா சிகிச்சை நிலை யங்களுக்கு தேவையான மரு ந்து வகைகள் உட்பட சகல வசதி களையும் சுகாதார அமைச்சு ஏற்கனவே வழங்கி இருப்பதாக வைத்தியர் ஹேமந்த ஹேரத் மேலும் தெரிவித்தார். (4-6)

# அவதானம் எலிக்காய்ச்சல்



(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவ ரையான காலப்பகுதியில் 2,584 பேருக்கு எலிக்காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, ஜனவரி மாதம் 496 பேரும் மார்ச் மாதத்தில் 795 பேரும் ஏப்ரல் மாதம் 704 பேரும் எலிக்காய் ச்சலுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

# நாட்டை 14 நாட்கள் முழுமையாக முடக்கவும்

## ஜனாதிபதிக்கு சுதர்ஷினி கடிதம்

(கொழும்பு)



நாட்டை 14 நாட்களுக்கு முழு வதுமாக மூடுமாறு கொரோனா தடுப்பு இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷினி பெர்னா ண்டோபுள்ளே ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடி தம் எழுதியுள்ளதாக தென்னில ங்கை ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அதேவேளை, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் வைத்தியர் எஸ். முன சிங்க 14 நாள் மூடுவது குறித்து முடிவு செய்ய ஒரு சிறப்பு கூட்டம் உள்ளது என்று கூறினார்.

முழுமையாக 14 நாட்கள் மூடுவது குறித்து இப்போது எது வும் கூற முடியாது. முன்னர் அறிவிக்கப்பட்டவை மட்டுமே தற்போது என்னால் கூற முடியும் என தெரிவித்தார். (4-6)

# மேலும் 369 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதி களை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 369 பேர் கைது செய் யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊட கப் பேச்சாளர், பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரி வித்துள்ளார்.

நேற்று காலை 6 மணி யுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலத்திற்குள் இவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-6)

# இந்தியாவின் நிலைமை விரைவில் ஏற்படலாம்!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை



(கொழும்பு)

*கொவிட் ஆபத்து குறித்து அவதானமின்றி மக்கள் செயற்பட்டால் இந்தியா முகம்கொடுக்கும் நிலைமை இலங்கைக்கு ஏற்படுவதனை தவிர்க்க முடியாமல் போகும் என சுகாதார பிரிவு எச்சரித்துள்ளது.*

எப்படியிருப்பினும் இந்தியா முகம் கொடுத்துள்ள நிலைமை, இலங்கைக்கு ஏற்படுவதனை தவிர்ப்பதற்கான அனைத்து நட வடிக்கைகளும் சுகாதார அமைச் சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக பிரதி சுகாதார பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

நாடு அபாய நிலைமையில் உள் ளதென்ற வார்த்தையை பிரயோ கிக்க முடியாது. எனினும் தீவிர நிலைமையில் உள்ளதென கூற லாம்.

நோய் அறிகுறிகளற்ற நோயா ளிகளை சில நாட்கள் வீட்டில் வைக்க நேரிடும். எனினும் நோயாளிகளுக்கு ஆபத்தான நிலைமை ஏற்படுவதற்கு முன் னர் வைத்தியசாலைக்கு அழை த்து செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

# பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழி விரைவில் உள்ளீர்க்கப்படும் - அலிசப்ரி

(கொழும்பு)

சட்டமா அதிபர் திணைக் களத்தில் சீன அரசின் நிதி உத வியுடன் புதிதாக நிர்மானிக் கப்பட்ட திறன் நூலக பெயர்ப் பலகையில் தமிழ் மொழி இணைக்கப்படாமை தொடர்பில் எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக் களத்தில் நிர்மாணிக்கப்பட்ட திறன் நூலக பெயர்ப் பலகையில் தமிழ் மொழி புறக்கணிக்கப் பட்டமை தொடர்பாக பாராளு மன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தொலைபேசி வாயி லாக நீதி அமைச்சரிடம் கலந்து ரையாடியதாக அவர் தெரிவித் தார்.

அத்துடன் விரைவில் சிங் கள, ஆங்கில, சீன மொழிக ளுடன் தமிழ் மொழியும் நூலக பெயர்ப் பலகையில் உள்ளீர்க் கப்படும் என நீதி அமைச்சர் உறுதியளித்திருப்பதாக தெரிவி க்கப்படுகிறது.

இவ்வாறான சில செயற்பா



டுகள் தமிழ் மக்கள் மனங்களில் அதிருப்தியை ஏற்படுத்துவதாக அமைச்சரிடம் அங்கஜன் சுட்டிக் காட்டியிருப்பதாக அவர் தெரி வித்தார். (4-6-30-33)

## அஸ்ட்ராஜெனகா தடுப்பூசி

# இந்தியத் திரிபுக்கு எதிராக 80 வீத செயல்திறன்

(கொழும்பு)




இந்தியாவில் கண்டறியப்பட்ட பி.617.2 -உருமாறிய கொரோனா வைரஸுக்கு எதிராக பைசர், ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் 80 வீதம் பாதுகாப்பு செயல்திறனை நிரூபித்துள்ள தாக இங்கிலாந்தில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இந்தத் தடுப்பூசிகள் இரண் டையும் பெற்றுக்கொண்டவர்கள் பி1.617.2 இந்திய உருமாற்ற வைரஸிலிருந்து 80 வீதம் பாது காக்கப்பட்டுள்ளமை ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளதாக ஆய்வா ளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இங்கிலாந்தில் பரவிவரும் உருமாறிய பி.117 வைரஸுக்கு எதிராக ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி 87 வீதம் பாதுகாப்பான செயல்தி றனை வெளிப்படுத்தியுள்ளதாக வும் ஆய்வில் கண்டறியப்பட் டுள்ளது.

இந்த ஆய்வு முடிவு இங்கி லாந்து அரசாங்கத்தின் சுகாதாரத் துறையினரின் கவனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (4-6)

## வீட்டில் திருட முற்பட்டவர் இளைஞர்களால் மடக்கிப் பிடிப்பு

(மன்னார்)

மன்னார் மூர்வீதி, குருசுக் கோவில் பகுதியில் உள்ள வீடுகளின் நீண்ட நாட்களாக திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் திருட முற்பட்ட போது அப்பகுதி இளைஞர்களினால் மடக்கி பிடிக்கப் பட்டார். குறித்த பகுதியில் உள்ள வீடுகளில் தொடர்ச்சியாக கோழிகள் திருட்டுப் போவதோடு, வீடுகளில் உள்ள துவிச்சக்கர வண்டிகள் உற்பட பெறுமதியான பொருட்கள் நாளாந்தம் திருட்டு போவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (4,6,285)



# 120 கிலோ கஞ்சா தொண்டைமானாறில் மீட்பு

(கரணவாய்)

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு பகுதியில் 120 கிலோ கஞ்சா போதை பொருள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

தொண்டைமானாறு கடல் வழியாக கடத்தி வரப்பட்ட கஞ்சா போதை பொருள் கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக ஊரிக்காடு இராணுவ முகாமை சேர்ந்த இராணுவத்தினருக்கு கிடைக்க பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், கடற்கரை பகுதியில் இராணுவத்தினர் சுற்றிவளைப்பு தேடுதலை நடத்தினர்.

அதன் போது பொதி செய்யப்பட்ட நிலையில் கடற்கரை பற்றை காட்டினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 120 கிலோ கஞ்சாவை மீட்டனர்.



சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4,6,33,60)

## 6 மில்லியன் செலவில் வீதி புனரமைப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் மாசார் கரந்தாய் இணைப்பு வீதி ஆறு மில்லியன் ரூபாய் செலவில் நிலையான வீதியாக அமைக்கப் படுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முப்பது வருடங்களுக்கு மேலாக குறித்த வீதி புனரமைக்க படாமல் மணல் வீதியாக காணப்பட்டது. பளை பிரதேசத்தின் கிராமங்களான மாசர், முருகாந்த நகர், முகவில் ஆகிய கிராமங்களை இணைக்கும் இவ் வீதியின் நிலை குறித்து பிரதேச மக்கள் மற்றும் பொது அமைப்பினர் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்து குறித்த வீதியை மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் புனரமைப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (4,6,350)

## இலவச கொவிட் - 19 பரிசோதனைக்கு தொடர்பு கொள்ளவும்

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பொது மக்கள் தங்களுக்கான இலவச கொவிட் -19 பரிசோதனையை மேற்கொள்ள விரும்பினால் அலுவலக நேரத்தில் 021 226 1006 என்ற இலக்கத்தினை தொடர்பு கொண்டு முற்பதிவினை மேற்கொள்ளுமாறு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் பயணத்தடை உள்ள காலத்திலும் சுகாதாரப் பணிமனை வழமையான வகையில் இயங்கும் என்பதுடன் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் மதியம் 12 மணி வரை தொடர்பு கொள்ள முடியும். எனவும் அறிவித்துள்ளார். (4,6,60)

## பயணத்தடை வேளை காவலாளி மீது தாக்குதல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-நாவற்குழி பகுதியில் அமைந்துள்ள சுற்றுலா தளம் ஒன்றின் காவலாளி மீது நேற்று முன்தினம் சனிக்கிழமை நண்பகல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பயணத்தடை அமுலில் இருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் இத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த 75வயதான நாவற்குழி முந்நூறு வீட்டுத்திட்டப் பகுதியைச் சேர்ந்த காவலாளி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் (4,6,30)

## கொரோனாவினால் நாக்கு பெரிதாகும் அபாயம்

கொரோனா தொற்றினால் மனித உடலில் நாக்கு பெரிதாகும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இந்த பாதிப்பு பதிவாகியுள்ளது.

இதுவரை அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் இந்தப் பாதிப்புக்கு இலக்காகிய 9 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



உலகையே அச்சுறுத்தும் கொரோனாத் தொற்றினால் மனித இனம் அவதியுறும் வேளையில், இத்தொற்றினால் உடலில் பாதிப்படையும் மற்றுமொரு பகுதி தொடர்பில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. (4,6)

## ஆலயங்களில் திருட்டு

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கைதடி நாவற்குழி பகுதியில் அமைந்துள்ள இரு ஆலயங்களில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு திருட்டு இடம்பெற்றுள்ளது. ஒரே வீதியில் அருகாமையில் அமைந்துள்ள இரு ஆலயங்களிலேயே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது. மின் மோட்டர், தேங்காய் எண்ணெய், உண்டியல் பணம் உள்ளிட்ட பல பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4,6,30)

## விசேட பூஜை வழிபாடு

இலங்கைத்திருநாட்டில் வாழும் மக்களும் உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனாவைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி நாளை செவ்வாய் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் கோப்பாய் சிறுப்பிட்டி வடக்கு அருள்மிகு முத்துமாரி அம்மன் ஞான வைரவர் தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது. விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவப்பிரம்மஸ்ரீ பா.கஜீவக் குருக்கள் அவர்களின் அருளாசி உரையும் வேதபாராணமும் இடம்பெறவுள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம் " நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலி பரப்பாக இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (4,6)

## சஜித்துக்கு கொரோனா



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் அவரது மனைவிக்கும் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார் (4)

## மதுபானப் போத்தல்களால் வீட்டின் மீது தாக்குதல்

(நெளுக்குளம்)

வவுனியா திருநாவற்குளம் பகுதியில் இளைஞர் குழு ஒன்று மதுபான போத்தல்களால் வீடு ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, திருநாவற்குளம் பகுதியில் வீதியில் அமர்ந்து மது அருந்திக் கொண்டிருந்த இளைஞர் குழு ஒன்று மதுபோதையில் அங்கிருந்த வீடு ஒன்றின் மீது மதுபோத்தல்களை எடுத்து வீசி வீட்டின்மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதனையடுத்து இவ்விடயம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். அரசாங்கத்தல் நாடாளாவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த பகுதியில் சட்டவிரோத மது விற்பனை அதிகரித்துள்ளதால் இவ்வாறன சில இளைஞர்கள் மது போதையில் தொடர்ந்தும் பல சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (4,6,299)



# சிறுவர் அரங்கம்

## அதிபுத்திசாலி மன்னரும் அப்பிராணி அமைச்சரும்



"என் நாட்டில் இருக்கும் அனைத்துக்கும் நான் தான் மன்னன். மனிதர்களோ மரங்களோ என்னை வணங்காவிட்டால் அது ராஜ குற்றம்தான்?"

"மன்னா... " "முக்கிய அமைச்சர் என்பதால் நீங்கள் எதிர்த்துப் பேசியதை நான் குற்றமாகக் கருதவில்லை. என்ன செய்வீர்களோ ஏது செய்வீர்களோ எனக்குத் தெரியாது.

உங்களுக்கு ஒரு வார காலம் அவகாசம். அதற்குள் என் அருமை பெருமைகளை அவற்றிடம் எடுத்துச் சொல்லி, என்னை வணங்க வைக்க வேண்டியது தங்களுடைய பொறுப்பு.

இல்லையேல் உங்களுக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பதை இப்போது என்னால் சொல்ல முடியாது" என்று குய்யோ முறையோ பற்களைக் கடித்தார். மன்னர் பேச்சுக்கு மறுபேச்சு பேச முடியுமா?

அப்பிராணியாருக்கு இரவு முழுதும் தூக்கம் வரவில்லை. மனைவியிடம், "மன்னரின் முட்டாள்தனங்களை இனியும் சகிக்க முடியாது. நாம் பக்கத்து நாட்டுக்குச் சென்று பிழைத்துக் கொள்ளலாம்" என்று வருத்தத்துடன் கூறினார்.

காரணத்தை அறிந்து கொண்ட அப்பிராணியாரின் மனைவி, "இது நம் நாடு. நாம் ஏன் இன்னொரு நாட்டுக்குச் செல்ல வேண்டும்? முட்டாள்தனமான மன்னருக்குப் புத்திசாலித் தனமாக யோசிக்க வேண்டியதில்லை" என்று சொல்லிவிட்டு, அப்பிராணியாரின் காதில் தன் திட்டத்தைச் சொன்னார்.

"இது நல்ல யோசனையா என்று தெரியவில்லை. ஆனால், ஏதாவது செய்துதானே ஆக வேண்டும்? இதை மன்னர் ஏற்றுக் கொண்டால் நாம் தப்பிப்போம். இல்லாவிட்டால், என்ன கதி ஆவோம் என்றே தெரியாது" என்று கவலையுடன் கூறினார். அப்பிராணியார். "நமக்கு வேறு வழியில்லை.

நம் மன்னர் இது போன்ற யோசனைகளை நிச்சயம் ஏற்றுக்கொள்வார்" என்று தைரியம் கொடுத்தார் அப்பிராணியார் மனைவி.

அடுத்த இரு தினங்களில் அப்பிராணியார் அதைச் செய்து, ஒரு ஒரு பட்டுத் துணியில் சுற்றிக்கொண்டு, அரண்மனைக்குச் சென்றார்.

(தொடரும்)

# மகாபாரதம்

**பீஷ்ம பருவம்**




இலட்சக்கணக்கான வீரர்கள் அழிய பாரதப்போர் தொடங்கும் முன் இருசாராரும் சில விதிமுறைகளைப் பின்பற்ற ஒப்புக் கொண்டனர்.

அவை வருமாறு, போர்பகலில் மட்டுமே நடைபெறும், ஆயுதமின்றி இருப்போரிம் போரிடக் கூடாது.

புறமுதுகிடுவோரை தொடர்ந்து சென்று தாக்கக்கூடாது. இரு வீரர்கள் போரிடுகையில் மூன்றாமவர் இடையே புகுந்து ஒருவரைத் தாக்கக் கூடாது.

அடைக்கலம் அடைந்தவர்களைக் கொல்லக்கூடாது, யானைப் படையுடன் யானைப் படையும் தேர்ப்படையுடன் தேர்ப்படையும் குதிரைப் படையுடன் குதிரைப்படையும் காலாட்படையுடன் காலாட்படையும் போரிட வேண்டும்.

இப்படி ஒரு நியதியை ஏற்படுத்திக் கொண்ட போது சில நேரங்களில் அதையும் மீறி போரிட நேர்ந்தது.

விதிமுறைகளுக்கு உட்பட்டுப் போர் தொடங்கும் நேரம். தருமர் தன் போர்க் கருவிகளைக் கீழே வைத்தார்.

போருக்குரிய கவசங்களை நீக்கினார். எதிரணியிலிருந்த பீஷ்மரை நோக்கிப் போனார். இதைப் பார்த்தவர்கள் வியந்தனர்.

பீஷ்மர் முதலியவர்களிடம் ஆசி பெறவே தருமர் செல்வதாக கண்ணன் நினைத்தார். துரியோதனன் பக்கம் இருந்தவர்கள் அவர் சரணடைய வருவதாக எண்ணினர்.

ஆனால் தருமர் பீஷ்மரிடம் சென்று அவரை வணங்கி அவருடன் போரிட அனுமதி வேண்டினார்.

அதுபோலவே துரோணர், கிருபர் ஆகியோருடனும் அனுமதி வேண்டிப் பெற்றார். பிறகு தமது இடம் சென்று போர்க்கோலம் பூண்டார்.

(தொடரும்)

## பருத்தித்துறையில் இடம்பெற்ற மரணச் சடங்கில் கலந்து கொண்டவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை - வியாபாரிமூலை பகுதியில் மரணச் சடங்கில் கலந்து கொண்டவருக்கு கொரோனா தொற்று உறுதியான நிலையில் அதே மரணச் சடங்கில் முறையாக முகக் கவசம் அணியாமல் கிரியை செய்த குருக்கள் மற்றும் உதவியாளர் உட்பட 8 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வியாபாரிமூலை பகுதியில் இடம்பெற்ற மரணச் சடங்கொன்றில் கலந்து கொண்ட ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகரால் இவர்கள் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

தொற்றுறுதியானவர், தொடர்பாளர்களை இனங்காட்டத் தவறிய நிலையில் இறுதிக்கிரியைகள் தொடர்பாக சமூக ஊடகத்தில் வெளியாகிய காணொளியை புலனாய்வுக்குட்படுத்தி பொது சுகாதார பரிசோதகரால் குறித்த தொடர்பாளர்கள் ஆதாரங்களுடன் இனங்காணப்பட்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## கொரோனாத் தரவுகளை திரட்ட வடக்கில் மருத்துவர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பான தகவல்களைத் திரட்டவும் அவற்றை ஒருங்கிணைக்கவும் வடக்கு மாகாணத்துக்குச் சுகாதார அமைச்சால் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கடமைகளையும் பொறுப்பேற்றுள்ளனர்.

இலங்கையில் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் கொரோனாத் தொற்றாளர்கள், அதனுடன் தொடர்புடைய ஏனைய விபரங்கள் உரியவாறு சேகரிக்கப்படுவதில்லை.

இந்தநிலையில், சுகாதார அமைச்சு நாடு முழுவதிலும் இதற்காக பயிற்றுவிக்கப்பட்ட மருத்துவர்களை நியமித்துள்ளது.

வடக்கின் 5 மாவட்டங்களுக்கு ஒவ்வொருவரும், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு ஒருவருமாக 6 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சுகாதார அமைச்சுடன் ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்ள வடக்கின் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் 5 மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஞா)

## முல்லைத்தீவு ஆடைத் தொழிற்சாலையில் கோவிட் கொத்தணி உருவாகும் அபாயம்

### 28 ஆம் திகதி 4 ஆயிரம் பேருக்கு பி.சி.ஆர்

( முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையால் அந்த மாவட்டத்தில் பெரும் கொரோனாக் கொத்தணி உருவாகும் அபாயம் இருக்கின்றது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அந்த மாவட்டத்தில் சுமார் 4 ஆயிரம் பேருக்கு எதிர்வரும் 28ஆம் திகதி ஒரே நாளில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதற்குரிய ஆளணி வளம் இல்லாமல் முல்லைத்தீவு மாவட்டம் பெரும் இடர்களை எதிர்கொள்கின்றது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆடைத்தொழிற்சாலையில் இதுவரை 365 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றியவர்களில் அன்டிஜன் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஆயிரத்து 3 பேரில் 266 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அன்டிஜன் சோதனையில் தொற்று இல்லை என்ற முடிவு கிடைக்கப் பெற்றவர்களுக்கு பி.சி.ஆர். சோதனை முன்னெடுக்கப்பட வேண்டும். எதிர்வரும் 28ஆம் திகதி அது முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை தொற்றாளர்களாகக் கண்டறியப்பட்டவர்கள், அவர்களின் முதல் தொடர்பாளர்கள், குடும்பத்தினர் என்று சுமார் 4 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இந்த மாத ஆரம்பத்தில் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் தொற்றுப் பரவத் தொடங்கியது. ஆனாலும், மே மாதம் 17ஆம் திகதி ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உள்ள தத்தமது வீடுகளுக்குச் சென்று வந்துள்ளனர். இதனால் இந்தக் கொத்தணியின் பரம்பல் மிகப் பெரியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலேயே அதிகளவு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களின் குடும்பங்கள் மற்றும் முதல் தொற்றாளர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்கு உரிய ஆளணி வளம் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் பெரும் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. (ஞா-281)

## 50 ஆயுர்வேத வைத்தியசாலைகள் கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றம்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா 3ஆவது அலைத் தொற்று தீவிரமெடுத்துள்ள நிலையில் ஏற்பட்டுள்ள மருத்துவ நெருக்கடி நிலையை சமாளிக்கும் வகையில் 50 ஆயுர்வேத வைத்தியசாலைகளை கோவிட் சிகிச்சை நிலையங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள 50 ஆயுர்வேத வைத்தியசாலைகளை கோவிட் இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்களாக மாற்றுவதற்கு தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆயுர்வேத வைத்தியசாலைகளை கோவிட் சிகிச்சை நிலையங்களாக மாற்றுவதன் ஊடாக சுமார் 3,500 கட்டில்களை கோவிட் சிகிச்சைக்காக உட்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வைத்தியசாலையில் சேவையாற்றுபவர்களுக்கு கோவிட் சிகிச்சை தொடர்பில் பயிற்சி வழங்கவுள்ளதுடன் அவர்களுக்கு உடனடியாக கோவிட் தடுப்பூசி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## பொருளாதாரத்தில் கவனம் செலுத்தி நாட்டு மக்களை பலியிடாதீர்கள்

### அரசுக்கு ரணில் அறிவுரை



(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் குறித்து கவனம் செலுத்தி, மக்களை பலியிட வேண்டாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா தொற்றுப் பரவலை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பது குறித்து மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளை அரசாங்கம் பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று அவர் வெளியிட்ட விசேட அறிவிப்பொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி மருந்தை செலுத்துவதற்கு 30 மில்லியன் தடுப்பூசிகள் தேவைப்படுவதாகவும் இவ்வாண்டுக்குள் அதனைப் பெற்றுக்கொள்வது கடினமானது.

ஆகவே கொரோனா தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கு புதிய சிந்தனை அவசியம் என்பதுடன், புதிய திட்டங்களை வகுக்க வேண்டும். முதல் கட்டத்தில் அஸ்ராசெனகா தடுப்பூசி மருந்து வழங்கப்பட்டவர்களுக்கு இரண்டாவது கட்டமாகவும் அஸ்ராசெனகா தடுப்பூசி மருந்தே வழங்கப்பட வேண்டும்.

கடந்த நவம்பர் மாதம் தடுப்பூசி மருந்து கொள்வனவிற்கென 200 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்திருந்தால் தற்போது தடுப்பூசி மருந்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டிருக்காது.

அரசாங்கத்தினால் இந்தியப் பிரஜைகள் நாட்டிற்கு அழைத்துவரும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் நிலையில், இந்திய வகை மரபணு மாற்றமடைந்த வைரஸ் தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் எச்சரித்துள்ளார். (ஞா)

## எழுமாற்றுப் பரிசோதனையில் பரு. சமுர்த்தி வங்கியில் ஒருவருக்கு கொரோனா

(கரணவாய்)

பருத்தித்துறை சமுர்த்தி வங்கியில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து 21 பேர் சுய தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளதுடன் வங்கிக்கும் சீல் வைக்கப்பட்டது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வெளியான முடிவில் புலோலி பகுதியைச் சேர்ந்த பருத்தித்துறை சமுர்த்தி வங்கியில் பணிபுரியும் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவருடன் நேரடித் தொடர்பு கொண்ட 21 பேர் சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஞா-60)

## இராணுவ அதிகாரியொருவர் கோவிட்டால் மரணம்

(கொழும்பு)

கொரோனா மூன்றாவது அலையில் முதலாவது இலங்கை இராணுவ அதிகாரியொருவர் உயிரிழந்துள்ளார்.

கேணல் ஹெமாக சேனவிரத்ன என்ற, இலங்கை ஆட்லறி படையணியின் அதிகாரியே உயிரிழந்துள்ளார். பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

இராணுவத்தின் தொழில் திறன் மேம்பாட்டு மையத்தில் கடமையாற்றிவரும்போது தொற்றிற்குள்ளாகி உயிரிழந்துள்ளார். (ஞா)

# மின்னல் தாக்கியதில் 17 பேருக்கு எரிகாயம்

## திம்புள்ள பகுதியில் சம்பவம்

(கொழும்பு)

திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை டிரேட்டன் தோட்டத்தில் மின்னல் தாக்கி 17 பேர் பாதிக்கப்பட்டுள் ளனர்.

அவர்கள் கொட்டகலை பிர தேச வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளனர். இந்த அனர் த்தம் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றுள் ளது.

தேயிலை மலையில் வேலை செய்துகொண்டிருந்தபோதே இந்த அனர்த்தத்துக்கு அவர்கள் முகம் கொடுத்துள்ளனர்.

இவ்வாறு மின்னல் தாக்கத் துக்கு உள்ளாகி வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டவர்கள் அனைவரும் ஆண்களாவர்.

இவர்கள் மின்னல் தாக்கத் தால் தூக்கி வீசப்பட்டனர் என வும், அதிர்ச்சியின் காரணமாகவும் உராய்வுக் காயங்கள் காரணமாக வும் இவர்கள் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வும் வைத்தியசாலையின் வட்டா ரங்கள் தெரிவித்தன. (ஞா)

# இலங்கையிலும் உருமாறிய திரிபு வைரஸ் உருவாகும் அபாயம்

## கலாநிதி சஞ்சய பெரேரா எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கோவிட் வை ரஸ் பரவும் வேகத்திற்கு அமைய இலங்கையிலும் உருமாறிய புதிய வைரஸ் திரிபு உருவாகும் அபாய நிலை அதிகம் இருப்பதாக மருந்து மற்றும் சுகாதார முகா மைத்துவம் தொடர்பான சர்வ தேச ஆலோசகர் கலாநிதி சஞ்சய பெரேரா தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பொன்றில் கரு த்து வெளியிடும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், இலங்கையில் உருமாறிய புதிய வைரஸ் திரிபு உருவாகி னால், அதன் பரவலை கட்டுப் படுத்த முடியாத நிலைக்கு செல் லும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கோவிட் வைரஸ் சமூகத் திற்குள் பரவவில்லை என சுகா தார அதிகாரிகள் கூறினாலும் அது உண்மையல்ல எனவும் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் வைரஸ் சமூகத்திற்குள் பரவி யுள்ளது எனவும் சஞ்சய பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவின் உருமாறிய திரிபு வைரஸ் புத்தாண்டுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் இலங் கைக்குள் பரவியுள்ளது என எச்சரித்தபோது சுகாதார அதிகா ரிகள் அதனை ஏற்கவில்லை.

தற்போது காணப்படும் நிலை யில் மக்கள் முழந்த வரையில் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய செயற்பட வேண்டியது முக்கியமானது எனவும் சஞ்சய பெரேரா குறிப்பிட்டுள்ளார். (ஞா)

# யாழ். நகர்ப் பகுதியில் விசேட ரோந்து நடவடிக்கையில் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்தும் முக மாக நாடு முழுவதும் பயணத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாண குடாநா ட்டின் முக்கிய வீதிகளில் பொலி ஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.

அத்தியாவசியத் தேவை தவிர் ந்து வீதிகளில் பயணிப்போர் எச்சரிக்கை செய்து வீடுகளிற்கு திருப்பி அனுப்பப்படுகிறார்கள்.

அத்தோடு அத்தியாவசிய தேவை யின் பொருட்டு வீதியில் பயணம் செய்வோரும் தமது பணி அடை யாள அட்டை மற்றும் தமக்குரிய அனுமதிப்பத்திரங்களை காண் பித்த பின்னரே வீதியால் பயணி க்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலை யத்தைச் சேர்ந்த விசேட பொலிஸ் அணியினரால் குறித்த நடவடிக்



கையானது யாழ்ப்பாண நகரத் தின் முக்கியமான வீதிகளில் இடம்பெற்று வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (ஞா-33)

# புத்தளம் நகர சபையின் தலைவர் விபத்தில் பலி

(புத்தளம்)

புத்தளம் நகர சபைத் தலை வர் அப்துல் பாய்ஸ் நேற்று இடம் பெற்ற விபத்து ஒன்றில் உயிரி ழந்துள்ளார்.

அவர் தனது 52 ஆவது வய தில் உயிரிழந்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

புத்தளம் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் உயி ரிழந்துள்ளதாக வைத்திய சாலை தகவல்கள் தெரிவிக் கின்றன. (ஞா)

## மாவட்டங்களுக்கிடையேயான

# ரயில் சேவை இன்று மட்டும் இயங்கும்

(கொழும்பு)

கோவிட் -19 வைரஸ் தாக்கத்தை கருத்திற்கொண்டு நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த பயணத்தடை நாளை செவ்வாய்கிழமை தளர்த்தப் படவுள்ள நிலையில் இன்று திங்கட்கிழமை மாத்திரம் மாவட்டங்களுக்கு இடையில் மாத்திரம் அத்தியாவசிய சேவைக்காக ரயில்கள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் கசுன் சாமர குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், கோவிட் - 19 வைரஸ் தாக்கத்தை கருத் திற் கொண்டு நாடளாவிய ரீதியில் அமுல் படுத்தப்பட்டுள்ள பயணத்தடை நாளை மாத்திரம் தளர்த்தப்படவுள்ளது. அத்தியா வசிய சேவையில் ஈடுபடுபவர்களுக்காக மாத்திரம் ரயில்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவையில் ஈடுபடுத்தப்பட வுள்ளன.

இதற்கமைய அம்பேபுஸ்ஸ ரயில் நிலையத்தில் இருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு 3 ரயில் பயணங்களும், கோட்டை ரயில் நிலை யத்தில் இருந்து அம்பேபுஸ்ஸவிற்கு 3 ரயில் பயணமும் பொல்காவெலயில் இருந்து கண்டிக்கும், கண்டியில் இருந்து பொல்காவெலவிற்கு ஒரு ரயில் பயணமும் அளுத்கமையில் இருந்து மருதானை க்கும், மருதானையில் இருந்து அளுத் கமைக்கு 2 ரயில் பயணமும் கொச்சி கடையில் இருந்து கொழும்பு கோட்டை க்கும், கொழும்பு கோட்டையில் இருந்து கொச்சிக்கடைக்கு 2 ரயில் பயணமும் அவிசாவளையில் இருந்து கொழும்பு கோட்டைக்கும், கொழும்பு கோட்டையில் இருந்து அவிசாவளைக்கு 1 ரயில் பயண மும் பெலியத்தயில் இருந்து ஹிங்கு ருவ்விற்கும், ஹிங்குருவ்வில் இருந்து பெலியத்தைக்கு ஒரு ரயில் பயணமும் இன்று மாத்திரம் போக்குவரத்து சேவை யில் ஈடுபடுத்தப்படும்.

தேசிய அடையாள அட்டை இலக்க த்தின் இறுதி இலக்கத்தின் அடிப்படை யிலும் நிறுவன பிரதானிகளின் உறுதிப் படுத்தல் பத்திரங்களையும் கொண்டு பய ணிகள் ரயில் போக்குவரத்து சேவையினை பயன்படுத்த முடியும் என்றார். (ஞா)

# மரண அறிவித்தல்

பிறப்பு 15 - 01 - 1954



இறப்பு 22 - 05 - 2021

## நல்லையா மகேஸ்வரன்

### ( துரைமணி )

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா மகேஸ்வரன் (துரைமணி) நேற்று முன்தினம் (22.05.2021) சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா மற்றும் திரவியம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் உதயகுமாரியின் அன்புக் கணவரும் உதயேஸ்வரன், உதயதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மேஸ்வரனின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (த)

ஈஞ்சடிவயிரவர் கோவிலடி,
சுதுமலை வடக்கு.

தகவல்:-
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2021 இல் வெளியிடப்பட்டது.